www.freetnbooks.com

# அரையாண்டுத் தேர்வு - 2025

XI-ஆ (30)

## பொதுத்தமிழ்

வகுப்பு : 11
காலம் : 3.00 மணி

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

14×1=14

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.
   (அ) இந்திரன் – பேச்சுமொழியும் கவிதைமொழியும்
   (ஆ) இன்குலாப் – ஒவ்வொரு புல்லையும்
   (இ) மல்லார்மே – யுகத்தின் பாடல்
   (ஈ) வால்ட் விட்மன் – புல்லின் இதழ்கள்

2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
   (அ) வெள்ளிவீதியார் – (1) தமிழ் நெடுஞ்சாலை
   (ஆ) அண்ணாமலையார் – (2) வாடிவாசல்
   (இ) சி.சு.செல்லப்பா – (3) குறுந்தொகை
   (ஈ) ஆர். பாலகிருஷ்ணன் – (4).காவடிச்சிந்து
   (அ) 3, 1, 2, 4 (ஆ) 3, 4, 2, 1 (இ) 3, 4, 1, 2 (ஈ) 2, 4, 1, 3

3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ________
   (அ) இயற்கை உரங்கள் (ஆ) ஊடுபயிர்
   (இ) மண்புழு (ஈ) இவை மூன்றும்

4. கூற்று: 'கோடு' என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
   விளக்கம்: கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
   (அ) கூற்று சரி, விளக்கம் தவறு (ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி
   (இ) கூற்று தவறு, விளக்கம் சரி (ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

5. "கபாட புரங்களைக் காவு கொண்டபின்னும்
   காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" – அடி மோனையைத் தெரிவு செய்க.
   (அ) காலத்தால் – கனிமங்கள் (ஆ) கபாடபுரங்களை – காவுகொண்ட
   (இ) காலத்தால் – சாகாத (ஈ) கபாடபுரங்களை – காலத்தால்

6. அலைகடல் – இலக்கணக்குறிப்பைத் தேர்க.
   (அ) வேற்றுமைத்தொகை (ஆ) உவமைத்தொகை
   (இ) பண்புத்தொகை (ஈ) வினைத்தொகை

7. விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் – ஒரு
   வினாவாய் நீயே நிற்கின்றாய்" – என்று உரைப்பவர் ________
   (அ) இரா. மீனாட்சி (ஆ) அழகிய பெரியவன்
   (இ) பிரமிள் (ஈ) அப்துல் ரகுமான்

8. "உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே" என்று பாடியவர் ________
   (அ) கலியாணசுந்தரம் (ஆ) அண்ணா (இ) பாரதிதாசன் (ஈ) ஜீவா



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

9. பற்று நீங்கியவனுக்கு உண்டாவது ____ பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது _____
(அ) பற்றுகள் பெருகும் – பொருள்களின் இன்பம் பெருகும்
(ஆ) பற்றுகள் அகலும் – பொருள்களின் துன்பம் அகலும்
(இ) பொருள்களின் இன்பம் பெருகும் – பற்றுகள் பெருகும்
(ஈ) பொருள்களின் துன்பங்கள் அகலும் – பற்றுகள் அகலும்

10. சரியானதைத் தேர்ந்தெடுக்க.
(அ) வரை – மலை (ஆ) வதுவை – திருமணம்
(இ) வாரணம் – யானை (ஈ) புடவி – கடல்
(i) அ, ஆ, ஈ – சரி; இ – தவறு (ii) ஆ, இ, ஈ – சரி; அ – தவறு
(iii) அ, இ, ஈ – சரி; ஆ – தவறு (iv) அ, ஆ, இ – சரி; ஈ – தவறு

11. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது ________
(அ) புகழ் (ஆ) அச்சம் (இ) நம்பிக்கை (ஈ) பெருமிதம்

12. அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் ________
(அ) மண்ணகம் (ஆ) நூலகம் (இ) விண்ணகம் (ஈ) அச்சகம்

13. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல் ________
(அ) இரகசிய வழி (ஆ) மனோன்மணீயம்
(இ) அகத்தியம் (ஈ) குணநூல்

14. பிழை திருத்தத்தில் Dt – இக்குறியீடு உணத்தும் பொருள் ________
(அ) சொல்லையோ எழுத்தையோ நீக்குக.
(ஆ) சொற்களுக்கிடையே இடைவெளி தருக.
(இ) தடித்த எழுத்தில் மாற்றுக.
(ஈ) ஒற்றை மேற்கோள் குறியிடுக.

## பகுதி – II

### பிரிவு –1

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×2=6

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. ஐங்குறுநூறு – குறிப்பு வரைக.
17. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?
18. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்"
– இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×2=4

19. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
21. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு – 3

எவையேனும் **ஏழனுக்கு** விடை தருக. 7×2=14

22. பாடாண் திணை – விளக்கம் தருக.
23. வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார். – விடைக்கேற்ற வினா அமைக்க.
24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
காலத்துக்கேத்த மாறிப் புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்.
25. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
   (அ) அமைந்து   (ஆ) ஆடுக
27. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.
   (அ) ஞாபகம்   (ஆ) போலீஸ்
28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
   (அ) கருவிழி   (ஆ) நீரோடை
29. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
   (அ) வைகை **(அல்லது)** (ஆ) எட்டுவரை
30. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
   (அ) எதிர்நீச்சல் **(அல்லது)** (ஆ) சொந்தக்காலில் நிற்றல்

## பகுதி – III

### பிரிவு –1

2×4=8

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக.

31. தமிழ்ப்பண்பாட்டின் ஓர் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
32. எண்ணியதை அடைதல் எப்போது எளிதாகும்? குறள் கருத்தை விளக்குக.
33. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாகத் தமிழ்நதி கூறுகிறார்?
34. 'சேரநாடு செல்வவளம் மிக்கது' என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

### பிரிவு 2

2×4=8

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக.

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. கவிதை ஒரு படைப்புச் செயல்பாடு என்பதை விளக்குக.
37. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?
38. கல்வியால் நீ அடைந்த சிறப்புகளைப் பத்து வரிகளில் எடுத்துரைக்க.

### பிரிவு – 3

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×4=12

39. (அ) பிறிதுமொழிதல் அணியைச் சான்று தந்து விளக்குக.

**(அல்லது)**

(ஆ) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்
– இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைச்சுட்டி விளக்குக.

40. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)

(அ) சிலம்பம் சுற்றலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் கம்பு
(ஆ) கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம் _மை
(இ) அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவேதான் ______
(ஈ) பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே இதழ்

41. கலைச்சொலாக்கம் தருக.

(அ) Text book   (ஆ) Touch Screen   (இ) Prefix   (ஈ) Equality

குறிப்பு: செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.

வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

(அ) தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.
(ஆ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

42. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

(அ) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை

(ஆ) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை

43. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர்.

– பாரதியார்

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3×6=18

44. (அ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' – இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

**(அல்லது)**

(ஆ) 'ஒவ்வொரு புல்லையும்' கவிதையில் வெளிப்படும் சமத்துவச் சிந்தனைகளைப் புலப்படுத்துக.

45. (அ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன – கூற்றினை மெய்ப்பிக்க.

**(அல்லது)**

(ஆ) 'தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாள்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர்' என்பதை நிறுவுக.

46. (அ) 'யானை டாக்டர்' கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

(ஆ) 'ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நண்பன் என்பவன் பிரிக்க முடியாத அங்கமாவான்' என்பதை ஜெயகாந்தனின் 'ஒரே நண்பன்' சிறுகதைவழி விளக்குக.

## பகுதி – V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில்** விடை தருக. 4+2=6

(அ) "சிற்றூரும்...." எனத் தொடங்கும் புரட்சிக்கவிப் பாடலை எழுதுக.

(ஆ) "யாகாவார்...." எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**************



www.freetnbooks.com | FREETNBOOKS